தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.07.2026

## முன்னிலை

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். CP 5660/F/2024

திரு.ப.மூர்த்தி, -- புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
திட்ட உதவியாளர்,
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
கோயம்புத்தூர் மாவட்டம்-641 004.

******

## இறுதி ஆணை

இவ்வாணையம் 12.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் செல்வி.மு.வளர்மதி, திட்ட உதவியாளர், கோயம்புத்தூர் மாவட்டம், (தற்போது உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி தனது எழுத்துமூல விளக்கத்தினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்கையில், அப்போதைய பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கத்தினை ஆணையம் ஏற்கவில்லை என்பதை பதிவு செய்து, அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

- **மனுதாரரின் 14.08.2024 தேதியிட்ட தகவல் கோரும் மனுவிற்கு உரிய காலத்திற்குள் (30 தினங்களுக்குள்) தகவல்கள் வழங்காகததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திருமதி.வளர்மதி, திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம் (தற்போது நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு**

**அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1)-ன் அபராதம் ரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை 01.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு மேற்சொன்ன அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. மேலும் அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.**

மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொதுத் தகவல் அலுவலர் மின்னஞ்சல் மூலம் ஆணையத்திற்கு அனுப்பியுள்ள ந.க.எண்.397/2026/ இராமா, நாள் 30.06.2026 தேதியிட்ட கடிதத்தில் அபாரத் தொகை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்டதற்கான ஒப்புகை ரசீதையும் இணைத்து ஆணையத்திற்கு அனுப்பியுள்ளதை ஆணையம் ஏற்று, இப்புகார் மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005

**<u>வழக்கு எண். CP 5660/F/2024</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
திட்ட உதவியாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்டம்-641 004.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (14.08.2024 தேதிய),**
**திருமதி.வளர்மதி,**
**திட்ட உதவியாளர்,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**
**(தற்போது நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக),**

**<u>மனுதாரர்</u>**

திரு.பி.மூர்த்தி,
1-88 தேவராயன்பாளையம்,
இச்சிப்பட்டி போஸ்ட்,
சோமனூர் வழி,
பல்லடம் தாலுகா,
திருப்பூர் மாவட்டம்-641 668.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் அலுவலகம்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
E&C மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).

Copy to: File NS/PA-